2029–இல் ராகுல் காந்திதான் பிரதமர் வேட்பாளர்

கோவை, ஆக. 13: வரும் 2029–இல் ராகுல் காந்திதான் நாட்டின் பிரதமர் வேட்பாளர் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.ராஜேஷ்குமார் தெரிவித்தார்.

கோவையில் இந்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் மற்றும் ஸ்கால் இன்டர்நேஷனல் கோயம்புத்தூர் அமைப்பின் சார்பில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாத் துறை பிரதிநிதிகள் பங்கேற்ற சர்வதேச சுற்றுலா மாநாடு வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், பங்கேற்ற பின் அமைச்சர் ராஜேஷ்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: முதல்வரின் அறிவுறுத்தலின்பேரில், சுற்றுலாத் துறையை பிற துறைகளைக் காட்டிலும் அதிவேக வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக வரலாற்றுச் சிறப்புமிக்க மகாபலிபுரத்தை மேம்படுத்த ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஆன்மிகத் தலங்களை இணைக்கும் வகையில் நாகூர், வேளாங்கண்ணி, திருக்கடையூர் ஆகிய இடங்களை ஒருங்கிணைக்க சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறை என்பது வனம், இந்து சமய அறநிலையத் துறை எனப் பல துறைகளுடன் இணைந்து இயங்குவதால், அத்துறைகளிடமிருந்து தடையின்மைச் சான்று பெறுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்னையை முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். உயர்நிலை அளவில் கமிட்டி அமைத்து உடனுக்குடன் அனுமதி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில திட்டங்களுக்கு மத்திய அரசிடமும் நிதி கோரப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து ஒருவர் பிரதமராக வர வேண்டும் என நெடுஞ்சாலை, விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சட்டப் பேரவையில் கூறியிருப்பது அவரது தனிப்பட்ட கருத்து.

தென்னிந்தியாவுக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற நோக்கில் அவர் பேசியிருக்கலாம். ஆனால், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தலைவரான ராகுல் காந்தி 2029-இல் நாட்டின் பிரதமராக ஆவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ராகுல் காந்திதான் பிரதமர் வேட்பாளர் என்பதை தமிழக வெற்றிக் கழகம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளும். விஜய் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவார் என்பது வெறும் ஊகமாகும் என்றார்.

1.350 கிலோ கஞ்சா பறிமுதல்: இளைஞர் கைது

பெ.நா.பாளையம், ஆக.13: காரமடை அருகே 1.350 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்த போலீஸார், இளைஞரைக் கைது செய்தனர்.

பெட்டதாபுரம் பேருந்து நிறுத்தம் இளைஞர் ஒருவர் போதைப் பொருள்களை வைத்திருப்பதாக பெரியநாயக்கன்பாளையம் போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, உதவி ஆய்வாளர் ஜெ.நமச்சிவாயம் தலைமையிலான போலீஸார் சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, அங்கு சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் நின்றிருந்த நபரிடம் சோதனை மேற்கொண்டபோது, அவர் 1.350 கிலோ கஞ்சா வைத்திருந்தது தெரிய வந்தது.

விசாரணையில், அவர் ஒடிஸா மாநிலத்தைச் சேர்ந்த கோபால் சுனா (25) என்பதும், பெ.நா.பாளையம் பகுதியில் தங்கி கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, அவரைக் கைது செய்த போலீஸார், அவரிடமிருந்த கஞ்சாவைப் பறிமுதல் செய்தனர்.

யானைகள் உயிரிழப்பு

வாளையாறு– கொல்லங்கோடு இடையே கேமராக்களை பொருத்த வலியுறுத்தல்

கோவை, ஆக.13: தமிழக–கேரள எல்லையில் ரயில் மோதி குட்டி, தாய் யானை உயிரிழந்த நிலையில், வாளையாறு–கொல்லங்கோடு இடையே தெர்மல் சென்சிங் கேமராக்களை பொருத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக- கேரள எல்லையை ஒட்டியுள்ள கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டம், வாளையாறு சாவடிப்பாரா புதுப்பதி வனத்தில் இருந்து புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் குட்டியுடன் வெளியேறிய 4 காட்டு யானைகள், அப்பகுதியில் உள்ள தண்டவாளத்தைக் கடக்க முயன்றன. அப்போது, கேரளத்தில் இருந்து கோவை நோக்கி 'பி' டி ராக் வழியாக வந்த மங்களூரு விரைவு ரயில் மோதியதில் குட்டி, தாய் யானை இன்ஜின் சக்கரங்களில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன.

இந்நிலையில், வாளையாறு–கொல்லங்கோடு இடையே தெர்மல் சென்சிங் கேமராக்களை பொருத்த வேண்டும் என வன ஆர்வலர் பாண்டியராஜா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது: ரயில் மோதி யானைகள் உயிரிழந்திருப்பது வருத்தம் அளிக்கிறது. எட்டிமடை - மதுக்கரை இடையே தமிழக வனத் துறையின் முயற்சியால் 12 கோபுரங்களில் தலா இரண்டு கேமராக்கள் என மொத்தம் 24 தெர்மல் சென்சிங் கேமராக்கள் அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருவதால் கடந்த 2022 அக்டோபர் முதல் ரயில் மோதி யானை உயிரிழப்பு நடைபெறவில்லை.

எனவே, தமிழக வனத் துறை பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது போல வாளையாறு - கொல்லங்கோடு இடையே தெர்மல் சென்சிங் கேமராக்களை பொருத்தி கட்டுப்பாட்டு மையத்தை அமைக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பகுதியில் ரயில் மோதி யானைகள் உயிரிழப்பதைத் தடுக்க முடியும். இந்தியா முழுவதும் ஒரு ஆண்டுக்கு 10 முதல் 15 யானைகள் ரயில் மோதி உயிரிழந்து வருகின்றன. எனவே, ரயில்வே துறை இந்த விஷயத்தில் முழு கவனம் செலுத்தி அடிக்கடி ரயில் மோதி யானைகள் உயிரிழக்கும் பகுதிகளில் தெர்மல் சென்சிங் கேமராக்களை பொருத்தி கண்காணிக்க வேண்டும் என்றார்.

வழக்குத் தொடுக்க இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளை முடிவு: வாளையாறு ரயில் விபத்து தொடர்பாக விரிவான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் போவதாகவும் தேசிய வனவிலங்கு பாதுகாப்பு அறக்கட்டளை அறிவித்துள்ளது.

இது குறித்து அறக்கட்டளை தரப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: ரூ.16 கோடி செலவில் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) கேமரா கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிந்தவர்கள் விபத்தின்போது என்ன செய்தார்கள்?. தகவல் தொடர்பு கட்டுப்பாட்டு அறைக்கும், ரயிலை இயக்கும் கட்டுப்பாட்டு மையத்துக்கும் இடையே தகவல் பரிமாற்றம் துண்டிக்கப்பட்டது ஏன்? தொழில்நுட்பக் கோளாறா அல்லது மனிதத் தவறா என்பன போன்ற பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. உயிரினங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வனத் துறையும், ரயில்வே துறையும் இணைந்து கடுமையான தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

விழிப்புணர்வுப் பேரணி...

வந்தே மாதரம் பாடலின் 150–ஆம் ஆண்டு தினத்தையொட்டி, 'வீடுதோறும் தேசியக் கொடி' என்ற பெயரில் வால்பாறை அஞ்சலக அதிகாரி மணிவண்ணன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்ற ஊழியர்கள்.

படிப்பைத் தொடர முடியாமல் தவித்த சிறுவனை பள்ளியில் சேர்த்த சிங்கப் பெண் படையினர்

வால்பாறை, ஆக.13: கோவையில் படிப்பைத் தொடர முடியாமல் தவித்த சிறுவனை வால்பாறை அரசுப் பள்ளியில் சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படையினர் சேர்த்தனர்.

சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படையினர் கோவை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதுடன், ஏழ்மையில் உள்ள குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றனர்.

அதன்படி, வால்பாறையை அடுத்த காடம்பாறை பகுதியில் உள்ள செட்டில்மெண்ட்டில் தந்தையின்றி தாயுடன் வசித்து வந்த சிறுவனை மீட்டு, வால்பாறை உண்டு உறைவிடப் பள்ளியில் சேர்த்து கல்வி கற்க உதவினர்.

இந்நிலையில், கோவை, குனியமுத்தூர் பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுவன் பெற்றோருடன் வசித்து வருகிறார். குனியமுத்தூர் அரசு உயர் நிலைப் பள்ளியில் 6–ஆம் வகுப்பு வரை படித்துள்ள சிறுவன், குடும்பத் தகராறு காரணமாக தந்தை தனியாக சென்ற நிலையில் பள்ளி படிப்பைத் தொடர முடியாமல் அவதியடைந்து வந்துள்ளார். இது தொடர்பாக சமூக வலைதளங்களில் விடியோ வெளியிட்டு சிங்கப் பெண் அதிரடிப் படையினர் உதவ வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து, அந்த மாணவரை மீட்ட சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படையினர், வால்பாறை காவல் நிலைய ஆய்வாளர் செல்வம் முன்னிலையில் வால்பாறை எம்.ஜி.ஆர். நகரில் உள்ள உண்டு உறைவிடப் பள்ளியில் சிறுவனை 6–ஆம் வகுப்பில் சேர்த்தனர். சட்டம்–ஒழுங்கை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் மனிதநேயத்துடனும் நடந்து கொண்ட சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படையினரை பொதுமக்கள் பாராட்டினர்.

ஆர்.எஸ்.புரத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் அதிர்வு?

தீயணைப்பு, மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு

கோவை, ஆக. 13: கோவை, ஆர்.எஸ்.புரம் பகுதியில் 300 தொழிலாளர்கள் தங்கியுள்ள 3 மாடிக் கட்டடம் வியாழக்கிழமை மாலை மெதுவாக சாய்வதாக கிடைத்த தகவலையடுத்து, அங்கு பல்வேறு துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆர்.எஸ்.புரம் மேற்கு சம்பந்தம் சாலையில் உள்ள 3 அடுக்கு மாடி கட்டடத்தில் தங்க நகைப் பட்டறை ஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கி பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், இந்தக் கட்டடம் மெதுவாக சாய்வதாகவும், லேசாக அசைவதுபோல இருப்பதாகவும், இதனால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகவும் அந்தப் பகுதி பொதுமக்கள் தீயணைப்புத் துறையினருக்குத் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புத் துறை அதிகாரிகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கட்டடத்தில் தங்கியிருந்த 300 தொழிலாளர்களையும் உடனடியாக வெளியேற்றினர். தொடர்ந்து இது குறித்து மாநகராட்சி மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொதுப் பணித் துறை பொறியாளர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கட்டடத்தின் உறுதித் தன்மை குறித்து விரிவான சோதனைகளை மேற்கொண்டனர்.

இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், கடந்த 2004-ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தக் கட்டடம் குறித்து அந்தப் பகுதி மக்கள் அளித்த புகாரின்பேரில் ஆய்வு நடத்தப்பட்டது. முன்னெச்சரிக்கையாக தொழிலாளர்களை வெளியேற்றி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டோம் என்றனர்.

பொதுப் பணித் துறை அதிகாரிகளின் முதற்கட்ட ஆய்வுக்குப் பிறகு தொழிலாளர்கள் மீண்டும் கட்டடத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதனிடையே, கட்டடம் தொடர்பான முழுமையான ஆய்வு அறிக்கை மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆகஸ்ட் 14-ஆம் தேதி முறைப்படி தெரிவிக்கப்படும் என அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. முன்னதாக, கட்டடம் சாய்வதாகப் பரவிய தகவலை அடுத்து அந்தப் பகுதியில் ஏராளமான பொதுமக்கள் திரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தேசியக் கொடி பேரணிக்கு அனுமதி மறுப்பு: உயர்நீதிமன்றத்தில் பாஜக அவசர வழக்கு

கோவை, ஆக. 13: சுதந்திர தினத்தை முன்னிட்டு, கோவையில் பாஜக சார்பில் நடத்த திட்டமிடப்பட்ட தேசியக் கொடி பேரணிக்கு காவல் துறை அனுமதி மறுத்ததை அடுத்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக அக்கட்சியின் கோவை மாநகர் மாவட்டத் தலைவர் ஜெ.ரமேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது: சுதந்திர தினத்தை முன்னிட்டு, நாடு முழுவதும் தேசியக் கொடியேற்றி கொண்டாடும் வகையில் ஆகஸ்ட் 11 முதல் 15 வரை அனைத்து இல்லங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் தேசியக் கொடியேற்ற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வரலாற்றை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில், கோவையின் முக்கிய வீதிகளில் தேசியக் கொடி பேரணி நடத்த காவல் துறையிடம் அனுமதி கோரப்பட்டது. ஆனால், மாநகர காவல் ஆணையர், தேசியக் கொடி பேரணிக்கு மட்டும் அனுமதி மறுத்து ஒருதலைப்பட்சமாக செயல்படுகிறார். காவல் துறையின் இந்த நடவடிக்கையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவு கிடைத்தவுடன் மாநில மற்றும் தேசியத் தலைவர்கள் பங்கேற்கும் வகையில் பேரணி நடத்தப்படும் என்றார்.

சிவாஞ்சலி, குமரகுரு கல்வி நிறுவனம் சார்பில் ஒடிசி இசை நிகழ்ச்சி



ஒடிசி இசை நிகழ்ச்சி அழைப்பிதழை வெளியிட்ட குமரகுரு கல்வி நிறுவனத்தின் லிபரல் ஆர்ட்ஸ் துறைத் தலைவர் பிரியதர்ஷினி, சிவாஞ்சலி இணை செயலாளர்கள் காயத்ரி பிரகாஷ், பிரகாஷ் சிதம்பரம், கிடார் துறைத் தலைவர் பிரதீபன்.

கோவை, ஆக. 13: கோவை, சிவாஞ்சலியின் டெம்பிள் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ் மற்றும் குமரகுரு கல்வி நிறுவனங்கள் சார்பில் ஒடிசி இசை நிகழ்ச்சி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (ஆகஸ்ட் 15, 16) நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக கோவை சிவாஞ்சலியின் டெம்பிள் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ் இணைச் செயலாளர்கள் காயத்ரி பிரகாஷ், பிரகாஷ் சிதம்பரம், கிடார் துறைத் தலைவர் பிரதீபன், குமரகுரு கல்வி நிறுவனத்தின் லிபரல் ஆர்ட்ஸ் துறைத் தலைவர் பிரியதர்ஷினி ஆகியோர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

கோவை சிவாஞ்சலியின் டெம்பிள் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ் மற்றும் குமரகுரு நிறுவனங்கள் இணைந்து நடத்தும் ஒடிசி என்ற கிடார் இசையை மையமாகக் கொண்ட இசை நிகழ்ச்சி குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் உள்ள ராமானந்த அடிகளார் அரங்கில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

இதில், சிவாஞ்சலியின் டெம்பிள் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் பங்கேற்கின்றனர். கிடார் இசையுடன் காட்சியமைப்பு மற்றும் கலை நிகழ்த்துதல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இந்நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு கட்டண நிர்ணயம் இல்லை. நிகழ்ச்சிக்கான அனுமதிச் சீட்டுகளை www.tfacbe.com/event-list என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்யலாம் என்றனர்.

கடன் வசூல் தீர்ப்பாயம்,
மாவட்ட முன்னாள் படைவீரர்களுக்கான மையம், 2வது, 3வது தளம்,
எண்.27, டிரேவலர்ஸ் பங்களா சாலை,
கோயமுத்தூர் - 641 018
OA. No. 110 of 2026
பேங்க் ஆப் பரோடா
பிரதிநிதியாக அதன் மேலாளர்,
கணபதி கிளை,
SF.No.443/2, சத்தி சாலை,
அத்திப்பாளையம் பிரிவு,
கோவை – 641006 – மனுதாரர்
– எதிர் –
ஸ்ரீ அம்மன் இண்டஸ்ட்ரீஸ்
அதன் உரிமையாளர் – V. ஜெயராம்
தொழில் முகவரி- SF.No.89,
கதவு எண். 20/1, பள்ளி வீதி, எருமை தோட்டம் , சக்தி நகர், சின்னவேடம்பட்டி,
கணபதி, கோவை – 641049
உரிமையாளர் வீட்டு முகவரி –
கதவு எண். 81/1, மணி நகர்,
சிவானந்தபுரம், சரவணம்பட்டி,
கோவை – 641035 – பிரதிவாதி
பிரதிவாதிக்கான அறிவிப்பு
மேற்படி வாதி வங்கி உங்களிடமிருந்து வரவேண்டிய கடன் நிலுவைத்தொகை ரூபாய் 28,19,405.33 பின் வட்டி செலவு தொகை சகிதம் வசூலாக வேண்டி தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவில் நீங்கள் அனைவரும் ஆஜராவதற்காக வரும் 29.10.2026 ம் தேதி வாய்தாவில் உள்ளது. மேற்படி தேதி காலை 10.30 மணிக்கு மேற்படி தீர்ப்பாயத்தின் முன்பு ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவேண்டியது. தவறும் பட்சம் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகிவிடும் என அறியவும்.
Mr. P. BHARATH. B.A.,B.L.,
Advocate
No.156/18, Parsn Trade Plaza
Dr.Nanjappa Road, Coimbatore – 641018
Mobile : 9443934865

IDBI BANK
ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேரில், பாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்–641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838
அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையாதலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு.
ஐடிபிஐ வங்கி லிட்–ன் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.27,29,556/– (01.08.2026 தேதி அன்று) தொகையை திரு.R.மணிராஜ் மற்றும் திருமதி.M.மாலதி, என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, கொள்நிலை கவாதீனம் (Physical Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 23.09.2026 தேதியில் (காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை) விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.30,54,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.3,05,400/–.
அசையாச் சொத்து விபரம்
கோயம்புத்தூர் மாவட்டம் – 641 104, மேட்டுப்பாளையம் தாலூகா, காரமடை கிராமத்தில் க.ச.எண்.632/1A, குரும்பனூர், குருந்தமலை ரோடு, "ஹில் வியூ ரெசிடென்சி பேஸ்–II"ல் மனை எண்.29 கிழமுறப் பகுதி மற்றும் மனை எண்.30ல் அமைந்த 2220 சதுர அடி விஸ்தீரண நிலமாகிய குடியிருப்புச் சொத்து திரு.R.மணிராஜ் மற்றும் திருமதி.M.மாலதி பெயரில் உள்ளது.
விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் பார்வையிடலாம்.
தேதி : 12.08.2026 ஒம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் ஐடிபிஐ வங்கி லிட்

கடன் வசூல் தீர்ப்பாயம்,
மாவட்ட முன்னாள் படைவீரர்களுக்கான மையம், 2வது, 3வது தளம்,
எண்.27, டிரேவலர்ஸ் பங்களா சாலை,
கோயமுத்தூர் - 641 018
OA. No. 111 of 2026
பேங்க் ஆப் பரோடா
பிரதிநிதியாக அதன் மேலாளர்,
கணபதி கிளை,
SF.No.443/2, சத்தி சாலை,
அத்திப்பாளையம் பிரிவு,
கோவை – 641006 – மனுதாரர்
–எதிர் –
1. P. சுரேந்திர பாபு
Flat No.202, A-பிளாக், அனன்யா ரெயின் ட்ரீ அபார்ட்மெண்ட்ஸ்,
டாக்டர் சுந்தரசாமி நகர்,
கணபதி, கோவை – 641006.
2. வேலவன் டட் கம்பெனி
அதன் உரிமையாளர்– P. சுரேந்திர பாபு
கதவு எண் .43A, ஏத்தகிரி ரோடு,
விளாங்குறிச்சி, கோவை – 641035.
– பிரதிவாதிகள்
பிரதிவாதிகளுக்கான அறிவிப்பு
மேற்படி வாதி வங்கி உங்களிடமிருந்து வரவேண்டிய கடன் நிலுவைத்தொகை ரூபாய் 23,25,876.93 பின் வட்டி செலவு தொகை சகிதம் வசூலாக வேண்டி தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவில் நீங்கள் அனைவரும் ஆஜராவதற்காக வரும் 29.10.2026 ம் தேதி வாய்தாவில் உள்ளது. மேற்படி தேதி காலை 10.30 மணிக்கு மேற்படி தீர்ப்பாயத்தின் முன்பு ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவேண்டியது. தவறும் பட்சம் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகிவிடும் என அறியவும்.
Mr. P. BHARATH. B.A.,B.L.,
Advocate
No.156/18, Parsn Trade Plaza
Dr.Nanjappa Road, Coimbatore – 641018
Mobile : 9443934865

KVB கரூர் வைஸ்யா பேங்க்
Smart way to bank
மேட்டுப்பாளையம் கிளை : எண்.3, KRG காம்ப்ளக்ஸ், இரயில்வே ஸ்டேஷன் ரோடு, மேட்டுப்பாளையம் - 641 301, செல் : 96550 10653, போன் : 04254-222232, 222242
தங்க நகைகள் ஏல அறிவிப்பு
எங்கள் வங்கியின் நகைக்கடன் பெற்று கடனுக்கான கெடு தேதி கடந்தும் அசல் மற்றும் வட்டி செலுத்தாத கீழ்க்கண்ட நபரின் நகைகளை ஏலம் விடுவதற்கான அறிவிப்பு. இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து 29.08.2026ம் தேதி (சனிக்கிழமை) பிற்பகல் 03.00 மணிக்குள் செலுத்தி நகைகளைத் திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் கடனிற்கு ஈடான நகைகளை 29.08.2026 (சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் வங்கி அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும் அல்லது நிர்வாகத்தின் சௌகர்யம் போல் மறு ஏல அறிவிப்பு எதுமின்றி வேறு தேதிகளில் ஏலம் விடப்படும் என்று அறியவும். இந்த அறிவிப்பு, கடன்தாரர் இறந்திருப்பின் அவர்களின் வாரிசுகளுக்கும் பொருந்தும். ஏலத்தொகை கடன் தொகைக்கு ஈடாக இல்லையெனில் மீதித் தொகைக்கு கடன்தாரர் செலவிலேயே சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். ஏல நடவடிக்கைகளை மாற்றவோ அல்லது ஒத்திப்போடவோ சம்பந்தப்பட்ட கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

கடன் பெற்றவரின் பெயர் மற்றும் முகவரி	கடன் தேதி	கடன் நிலுவைத் தொகை 12.08.2026 தேதி வரை	மொத்த எடை (கி)
கணக்கு எண்.			நிகர எடை (கி)
திரு. கிருஷ்ணராஜ் மணி, எண்.2, போலீஸ் வீதி, மேட்டுப்பாளையம் – 641 301	05.03.2025	ரூ.1,42,752/–	30.00
165995100000 2907			26.36

தேதி : 14.08.2026 கிளை மேலாளர், மேட்டுப்பாளையம்

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
இந்தியாவின் பன்னாட்டு வங்கி
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST
அனுப்பர்பாளையம் கிளை : எண்.5, M R R நகர், மெயின் ரோடு, அனுப்பர்பாளையம், ஈரோட்டுப் அஞ்சல், பொள்ளாச்சி (தாலூகா), கோயம்புத்தூர் - 642 205. போன் : 04259-266568, 94860 78568
மின்னஞ்சல் : anuppa@bankofbaroda.bank.in
சுவாதீன அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV [விதி–8(1)] (அசையாச் சொத்திற்காக)
பேங்க் ஆஃப் பரோடா–ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் 2002ம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமுலாக்கச் (இரண்டாவது) சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் விதி 3ன்படி அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமுலாக்க விதிமுறைகளுக்கு இணங்கவும், கடன்தாரர் : திருமதி. ரம்யாபேகம் R, க/பெ. திரு. முரளி N மற்றும் திரு. முரளி N, த/பெ. நடராஜ் என்பவர்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ் தேதி 20.04.2026 அன்று அனுப்பி அந்த நோட்டீசில் குறிப்பிட்டிருந்த கடன் பாக்கி, ரூ.42,86,826.97 (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து எண்பத்து ஆறாயிரத்து எண்ணூற்று இருபத்து ஆறு மற்றும் பைசா தொண்ணூற்று ஏழு மட்டும்) அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.
அந்தத் தொகைகளை கடன்தாரர் திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பொதுவாக அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) வது பிரிவின் கீழும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதி முறைக்கு இணங்கவும் 07.08.2026 அன்று தனது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டார்.
பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.
எனவே குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனின் மேற்படி சொத்து விஷயத்தில் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாதென்றும், அவ்வாறு மேற்கொண்டால் 06.08.2026 தேதி அன்று, ரூ.42,84,963.38 (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று மற்றும் பைசா முப்பத்து எட்டு மட்டும்) மற்றும் வட்டி சேர்த்து பேங்க் ஆஃப் பரோடாவிற்குச் செலுத்தப்படுவதற்கு உட்பட்டதாகும்.
அசையாச் சொத்து/களின் வி